+2

No. of Printed Pages : 7

613375 8151

பதிவு எண் | J | U | N | E | - | 1 | 8 |

# பகுதி I — தமிழ் — முதல் தாள்

## (செய்யுளும், இலக்கணமும்)

# Language — Part I — TAMIL — Paper I

நேரம் : 3 மணி ] [ மதிப்பெண்கள் : 100

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

**குறிப்பு :** (i) விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

(ii) வினா எண் **VI** -க்கான விடைகள் மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

**I.** பின்வரும் வினாக்களுள் **எவையேனும் நான்கனுக்கு மட்டும்** ஒவ்வொன்றிற்கும் **ஐந்து வரிகளில்** விடை எழுதவும். **4x2=8**

1. எட்டுத்தொகை நூல்கள் யாவை ?

2. எளியவும் அரியவும் ஆவன யாவை ?

3. சிலப்பதிகாரம் கூறும் மூன்று உண்மைகளை எழுதுக.

4. உலா என்பதன் பொருளை விளக்குக.

5. குழந்தைத் தொழிலாளர்களால் ஏன் கண்ணாமூச்சி ஆட இயலவில்லை ?

6. உமறுப்புலவர் எழுதிய நூல்கள் யாவை ?

[ திருப்புக

II. பின்வரும் வினாக்களுள் **எவையேனும் மூன்றனுக்கு மட்டும்** ஒவ்வொன்றிற்கும் **பத்து வரிகளில்** விடை எழுதுக. **3x4=12**

7. 'எங்கள் தமிழன்னை வாழிய வாழிய

வென்றடி வாழ்த்துவமே'

- என்று வரத நஞ்சையப்பிள்ளை மொழியை வாழ்த்துவதனை விளக்குக.

8. பராய்க்கடன் உரைத்தல் - விளக்குக.

9. அறிவின் இலக்கணத்தை எழுதுக.

10. கோவலனைக் கண்டபொழுது நிகழ்ந்த அற்புதம் யாது ?

11. தாவீதன் கோலியாத்தினை வென்றமை யாங்ஙனம் ?

III. பின்வரும் வினாக்களுள் **எவையேனும் மூன்றனுக்கு மட்டும்** ஒவ்வொன்றிற்கும் **பத்து வரிகளில்** விடை எழுதுக. **3x4=12**

12. தலைவி மேகத்திடம் மொழிந்த தூது மொழிகள் யாவை ?

13. இராசராச சோழனின் வில், வாள், முரசு, கொடி, குடை குறித்துக் கூறப்பட்டன யாவை ?

14. ''தோல்விகள் ஏதும் உனக்கில்லை இனித் தொடு வானம்தான் உன் எல்லை'' என்று கூறி தாராபாரதி விளக்குவன யாவை ?

15. மேகக் கூட்டங்கள் எவ்வாறெல்லாம் உருவகம் செய்யப் பெறுகின்றன ?

16. மணிமேகலா தெய்வம் புத்தபிரானைப் போற்றி செய்தமை யாங்ஙனம் ?

**IV.** பின்வரும் வினாக்களுள் **ஏதேனும் ஒன்றனுக்கு இருபது வரிகளில்** விடை எழுதுக. **1x8=8**

17. 'வினைத் திட்பம்' என்னும் தலைப்பில் திருவள்ளுவர் கூறியுள்ள கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

18. சீதையை அனுமன் கண்டு வந்து கூறிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.

19. 'சிக்கனம்' என்னும் தலைப்பில் கவிஞர் சுரதா கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

**V.** பின்வரும் செய்யுளடிகளின் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக. **4x1=4**

20. ''குருகுமுண்டு தான் மணந்த ஞான்றே''

(அ) இவ்வடி இடம்பெற்ற நூல் எது ?

(ஆ) இக்கூற்றமைந்த செய்யுளைப் பாடியவர் யார் ?

(இ) இது யார் கூற்று ?

(ஈ) 'குருகு' என்பதன் பொருள் யாது ?

**அல்லது**

21. ''வாய்த்தீரே மானத்தை உயிரைக் காக்க
மறப்பரிது நும்நன்றி என்றாள்''

(அ) இவ்வடிகள் பயின்று வரும் நூல் எது ?

(ஆ) இந்நூலை இயற்றியவர் யார் ?

(இ) யார் கூற்று ?

(ஈ) யாரிடம் கூறிய கூற்று ?

**VI.** 22. 'மனிதரெலாம்' எனத் தொடங்கும் பாடலை அடிபிறழாமல் எழுதி, அதன் பா வகையையும் எழுதுக. **4+2=6**

23. ''எப்பொருள்'' எனத் தொடங்கும் குறளையும், ''அரிது'' என முடியும் குறளையும் அடிமாறாமல் எழுதுக. **2+2=4**

[ திருப்புக

VII. 24. எவையேனும் இரண்டு சொற்களுக்கு உறுப்பிலக்கணம் தருக. 2x2=4

(அ) புதைந்த (ஆ) செய்க (இ) நிற்கின்றார்

(ஈ) நின்றிலன் (உ) காண்பது (ஊ) அறைதல்

25. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றனுக்கு இலக்கணக் குறிப்பு தருக. 3x2=6

(அ) வைவேல் (ஆ) கருங்காக்கை (இ) இனிதினிது

(ஈ) உம்பி (உ) படூஉம் (ஊ) அறன்

26. எவையேனும் இரண்டு தொடர்களைப் பிரித்து புணர்ச்சி விதி தருக. 2x2=4

(அ) பேரிடி (ஆ) காற்சிலம்பு (இ) நன்றன்று

(ஈ) தென்கரை (உ) பூங்கொடியாள் (ஊ) முன்னரண்

27. சான்று தந்து விளக்குக. 1x4=4

பொதுவியல் திணை அல்லது வினை முற்றிய தலைவன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.

28. ''உதவி வரைத்தன் றுதவி உதவி 1x4=4

செயப்பட்டார் சால்பின் வரைத்து

-இக்குறட்பாவில் அமைந்துள்ள அணியைச் சுட்டி விளக்குக.

**அல்லது**

எடுத்துக்காட்டு உவமையணி.

**அல்லது**

உருவக அணி - சான்று தந்து விளக்குக.

VIII. பொருத்துக. 4x1=4

| | திணை | | ஊர் |
|---|---|---|---|
| 29. | குறிஞ்சி | - | பாடி, சேரி |
| 30. | முல்லை | - | பட்டினம், பாக்கம் |
| 31. | மருதம் | - | சிறுகுடி |
| 32. | நெய்தல் | - | பேரூர், மூதூர் |
| | | - | குறும்பு |

IX. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 16x1=16

33. 'ஒன்றே யென்னின்' என்னும் கடவுள் வாழ்த்துப் பாடல் அமைந்துள்ள காண்டம் :

(அ) அயோத்தியா காண்டம்

(ஆ) சுந்தர காண்டம்

(இ) யுத்த காண்டம்

34. புறம், புறப்பாட்டு என வழங்கப்பெறுவது :

(அ) அகநானூறு (ஆ) புறநானூறு (இ) பதிற்றுப்பத்து

35. அகநானூற்றுப் பாக்களின் அடி வரையறை :

(அ) 4 அடி முதல் 8 அடி வரை

(ஆ) 13 அடி முதல் 31 அடி வரை

(இ) 9 அடி முதல் 12 அடி வரை

36. மனித நாகரிகம் பிற நாடுகளில் தோன்றும் முன்னரே வாழ்வியல் நெறிகளை வகுத்துக்காட்டிய நூல் :

(அ) திருவள்ளுவமாலை

(ஆ) திருவாசகம்

(இ) திருக்குறள்

37. அறத்துப்பாலில் உள்ள இயல்களின் எண்ணிக்கை :

(அ) 2 (ஆ) 3 (இ) 4

38. ஓதலூர் எந்த நாட்டைச் சேர்ந்தது ?

(அ) குட நாடு (ஆ) குட்ட நாடு (இ) கற்கா நாடு

39. தாம் இயற்றிய இராமகாதைக்குக் கம்பர் இட்ட பெயர் :

(அ) இராமாவதாரம் (ஆ) ஆதிகாவியம் (இ) இராமாயணம்

40. '...........' கடுத்தவவ் வரக்கன் வென்ற சீர்முகத் தினவல் யார் ?

(அ) தாவீது (ஆ) வளன் (இ) கோலியாத்து

[ திருப்புக

41. ''மாலை மதிக்குஞ்சி ஈசனும் போதனும் வாசவனும்'' என்னும் செய்யுளடியில் 'போதன்' என்னும் சொல் யாரைச் சுட்டும் ?

(அ) பிரமன் (ஆ) ஈசன் (இ) இந்திரன்

42. வேண்மான் வெளியன் தித்தன் :

(அ) சேரன் (ஆ) சோழன் (இ) பாண்டியன்

43. 'மடந்தை' பருவத்திற்குரிய வயது :

(அ) 8 - 11 (ஆ) 14 - 19 (இ) 12 - 13

44. சுரதா நூல்களுள் தமிழ் வளர்ச்சித்துறையின் பரிசினைப் பெற்ற நூல் :

(அ) துறைமுகம்

(ஆ) தேன்மழை

(இ) சுவரும் சுண்ணாம்பும்

45. பிரெஞ்சுக் குடியரசுத் தலைவரிடம் செவாலியர் விருதினைப் பெற்றவர் :

(அ) வாணிதாசன் (ஆ) பாரதிதாசன் (இ) முடியரசன்

46. ''............. கம்பலை மாக்கள் கணவனைத் தாங்காட்ட .............''

- என்னும் தொடரில் கம்பலை மாக்கள் என்பதன் பொருள் :

(அ) ஆரவாரித்துத் திரியும் மக்கள்

(ஆ) கம்பை உடைய மக்கள்

(இ) அமைதியான மக்கள்

47. 'மரபுக் கவிதையின் வேர் பார்த்தவர் ; புதுக்கவிதையில் மலர் பார்த்தவர்' என்று பாராட்டப்படும் கவிஞர் :

(அ) தாராபாரதி

(ஆ) சுரதா

(இ) அப்துல் ரகுமான்

48. சுந்தரர் தேவாரம் :

(அ) முதலாந்திருமுறை

(ஆ) ஏழாந்திருமுறை

(இ) பன்னிரெண்டாந்திருமுறை

X. **கோடிட்ட இடங்களை ஏற்ற சொற்களால் நிரப்புக.** **2+2=4**

49. ____________ செய்தக்க தாண்மை இடைக்கொட்கிண்

____________ விழுமந் தரும்.

50. திறனல்ல தற்பிறர் ____________ நோநொந்

தறனல்ல ____________ நன்று.

-oOo-